**O.S. No.56/2024**

**18.02.2026**

**வா.சா.1**

**திரு ரமேஷ்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் வாதிகளின் உறவினர் அல்ல. 1 முதல் 6 வாதிகள் வெளி மாநிலங்களில் வசித்து வருகிறார்கள் என்றால் சரி. தாவா சொத்து விபரம் 19.12.2023 ல்தான் தெரியும் என்றால் பவர் வாங்குவதற்கு முன்பு பட்டா, சிட்டாடங்கல் பார்த்த பிறகுதான் பவர் பெற்றேன். பவர் பெறுவதற்கு ஓரிரு மாதங்களில் வில்லங்க சான்றிதழ், பட்டா, சிட்டாடங்கல் பார்த்த பிறகுதான் பவர் பெற்றேன். பவர் பெறுவதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பு மூல ஆவணங்களான பட்டா, சிட்டாடங்கல், வில்லங்க சான்றிதழ் பார்த்த பிறகுதான் தாவா சொத்து விபரங்கள் எனக்கு தெரியவந்தது என்றால் சரி. என்னால் பெறப்பட்ட வா.சா.ஆ.1 உரிய முத்திரை கட்டணம் கட்டி பதிவு செய்யப்படாத ஆவணம் இல்லை என்றால் தவறு. தாவா சொத்தை பொறுத்து 3 ம் நபர் என்பதால் உரிய பதிவு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:50:07 +0530

கட்டணம், முத்திரை கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் தவறு. சுமார் 6 மாதம் கழித்து பதிவு துறையிலிருந்து ரூ.20,000/- கட்ட வேண்டுமென எனக்கு கடிதம் வந்தது, தபால் வந்தவுடன் மேற்படி தொகையை உடனே கட்டிவிட்டேன். சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து குறைவு முத்திரை கட்டணம் குறித்து எனக்கு வந்த கடிதத்தையோ செலுத்தப்பட்ட தொகை ரசீதையோ ஆவணங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தாவா சொத்தின் புல எண் 1801/1 ஆகும். மேற்படி புல எண்ணின் விஸ்தீரணத்தை காட்டக்கூடிய புலப்படம், "அ" பதிவேடு, சிட்டாடங்கல், பட்டா மாறுதல் உத்திரவு போன்ற ஆவணங்கள் எதுவும் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி, பவரில் நகர அளவை பதிவேடு நகல் இணைத்துள்ளேன். 2023 ல் பவர் பெற்ற பிறகு அதன்பின் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியும். புல எண் 1801/1 ல் சம்பத்குமாருக்கு சொந்தமான முழு சொத்து விபரத்தில் இரு நபர்களுக்கு விற்பனை செய்தது போக பாக்கி உள்ள விபரத்தை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பவரில் குறிப்பிட்டுள்ளேன். நான் சொத்தை கிரயம் வாங்கியுள்ளேனா என்றால் ரூ.5,00,000/- கொடுத்து Power for Consideration வாங்கியுள்ளேன். வழக்குரையில் 4½ பங்கு என எதனடிப்படையில்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.18 15:50:15 +0530

குறிப்பிட்டுள்ளேன் என்றால் சம்பத்குமாரின் மகள் விஜய்லெட்சுமி இறந்து விட்டதால் விஜயலெட்சுமிக்கு 2 குமாரர்கள் என்பதாலும் ஒரு குமாரர் விஜய் ஆனந்திடம் மட்டும் பவர் பெற்றுள்ளதால் 4½ பங்கு என குறிப்பிட்டுள்ளேன். இந்த விபரத்தை நான் வழக்குரையில் குறிப்பிடவில்லை. சம்பத்குமாரின் இறப்பு சான்றிதழோ வாரிசு சான்றிதழோ வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் பொது அதிகார பத்திரத்தில் தாக்கல் செய்துள்ளேன். சம்பத்குமார் உயிருடன் இருந்தபோது 1991 ல் 99 ச.அடி விற்பனை செய்துள்ளார் என்றால் சரி. சம்பத்குமார் இறந்தபிறகு அவரது மகள்கள் 1998 ல் 109 ச.அடியை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரி. சம்பத்குமாரும் அவரது வாரிசுகளும் விற்பனை செய்த விபரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் சான்று நகல் பெற்று பார்த்த பிறகுதான் தெரியவந்தது. அதற்கான ஆவணங்கள்தான் வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 என்றால் சரி. 11.01.1976 தேதியிட்ட கிரய ஆவணம் வா.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.5 யை சார் பதிவாளர் அலுவலகத்தில் 29.12.2023 ல் பெற்றேன். வா.சா.ஆ.5 யை பெற்றபிறகுதான் இதில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியவந்தது என்றால் சரி. ஆனால், அது போலி ஆவணம். வா.சா.ஆ.5 யை நான் படித்து பார்த்தேன். வா.சா.ஆ.5 நாராயணசாமி தேவருக்கு சம்பத்குமார் எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் என்றால் சரி.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:50:21 +0530

வா.சா.ஆ.5 ல் புல எண் 1801 ல் 3974 சதுரடி என கண்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.5 ஆனது11.01.1976 ல் பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை 23.03.1976 ல் பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரத்தைதான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை, சம்பத்குமாரின் C ஷெட்யூலில் உள்ள சொத்தைதான் குறிப்பிட்டுள்ளேன். வா.சா.ஆ.5 ல் சம்பத்குமாரின் அப்பா பெயர் ராமசாமி அய்யங்கார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சம்பத்குமார் அவருடைய சொத்தை 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் இது போலி ஆவணம். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரமும் வா.சா.ஆ.5 ல் குறிப்பிட்டுள்ள சொத்து விபரமும் ஒரே உரிமையாளர் என்பதால் அதன் புல எண் ஒன்று என்பதால் நான் செல்லாது என பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் புல எண் சரி. ஆனால், வா.சா.ஆ.5 ல் பல புல எண்கள் உள்ளன. 1976 ல் வா.சா.ஆ.5 ஏற்பட்டு சுமார் 47 வருடங்கள் கழித்துதான் 19.12.2023 ல் வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.5 எந்த அரசு அலுவலகங்களிலும் வில்லங்க சான்றிதழிலும் பதிவேற்றம் செய்யப்படவில்லை. ஏனென்றால் இது போலியான ஆவணம். வா.சா.ஆ.5 மன்னார்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 576/1976 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:50:26 +0530

என்னுடைய கட்சி வா.சா.ஆ.5 மன்னார்குடி சார் பதிவாளர் அலுவலகத்தின் வில்லங்க சான்றிதழில் 47 ஆண்டுகளாக காண்பிக்கப்படவில்லை என்பதுதான். மேற்படி பிழையானது பதிவு துறை அலுவலகத்தில் ஏற்பட்ட பிழை எனவும் சொத்தை வாங்குவோர் விற்பவருக்கிடையே ஏற்பட்ட பிழை அல்ல எனவும் சொன்னால் உண்மையல்ல. போலி ஆவணம் என்பதால் பதிவேற்றம் செய்யப்படவில்லை. 1976 ல் சம்பத்குமார் உயிருடன் உள்ள போதே அவருக்குரிய சொத்தை பொறுத்து நாராயணசாமி தேவரிடம் விற்பனை செய்துவிட்டார் சார் பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்க சான்றிதழில் மேற்படி ஆவணத்தை பதிவேற்றுவதில் குளறுபடி நடந்துள்ளதால் அதை சாதகமாக நான் பயன்படுத்திக்கொண்டு உண்மைக்கு மாறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. சொத்தை வாங்கிய நாராயணசாமி தேவரும் சொத்தை விற்பனை செய்த சம்பத்குமாரும் இறந்து விட்டார் என்றால் ஆமாம். சொத்தின் உரிமையாளர் சம்பத்குமார் உயிருடன் இருந்தபோதே சொத்தை விற்பனை செய்து விட்டதால் பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் செல்லாது என்றால் தவறு. 1976 க்கு பிறகு தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட எந்த ஆவணமும் 1ம் பிரதிவாதியின் உரிமையை கட்டுப்படுத்த கூடியதல்ல என்றால் தவறு. வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் எந்தவித

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.18 15:50:31 +0530

பரிகாரமும் கோர இயலாது என்றால் தவறு. வாதிகள் எனக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுக்க உரிமையில்லை என்றாலும் அந்த ஆவணத்தின் அடிப்படையில் என்னால் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றாலும் சம்பத்குமாரின் வாரிசுகளுக்கு முழு அதிகாரம் உள்ளது. ஏனென்றால், அவர்கள்தான் இந்த சொத்தின் வாரிசுகள். சொத்தின் உரிமையாளர் சொத்தை கிரயம் செய்தபிறகு அவரது வாரிசுகள் பின்னிட்டு சாசனம் ஏற்படுத்த வாய்ப்பில்லை என்றால் தவறு. 1976 ல் நடந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது எனவும் அதுகுறித்து பரிகாரம் கோருவதற்கு எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது எனவும் சொன்னால் தவறு. தாவா சொத்தில் கடைகள் உள்ளன என்றால் சரி. 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் வாடகைதாரரை காலி செய்வதற்கு மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் அவர் உரிமையாளர் இல்லை. அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. நிறைவேற்று மனுவின் அடிப்படையில் வாடகைதாரரை காலி செய்ய முற்படும்போது வாடகைதாரரான குமாரின் தூண்டுதலின் அடிப்படையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. குமார் எனக்கு நெருங்கிய உறவினர் எனவும் அவர் சொன்னதன் அடிப்படையில்தான் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:50:39 +0530

48 வருடங்களுக்கு முன்பு பெறப்பட்ட சொத்தின் உரிமை குறித்தோ அதன் சுவாதீனம் குறித்தோ என்னால் எந்த பரிகாரமும் கோர இயலாது என்றால் தவறு. இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் தவறு. வழக்குரையின் 4 ம் பக்கத்தில் பத்தி 3 ல் வழக்கு சொத்தானது கடந்த 19.12.2023 ல் ஏற்பட்ட பவர் பத்திரத்தின்படி வாதிகளுக்கு சொந்தமாக இருந்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. வாதிகள் அதுபோன்று பவர் எழுதி கொடுப்பதற்கு உரிமையில்லை எனவும் பவர் பத்திரத்தின் அடிப்படையில் சொத்தை உரிமை கொண்டாடுவதற்கு உரிமையில்லை எனவும் சொன்னால் தவறு. 2023 க்கு முன்பு வழக்கு நடவடிக்கை எதுவும் எனக்கு தெரியாது எனவும் அதை பொறுத்து நான் சாட்சியம் அளிக்க நான் தகுதியற்றவர் எனவும் சொன்னால் தவறு. தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் தவறு. மோசடியாக ஆவணம் ஏற்பட்டது சம்மந்தமாக என்னுடைய முதல்வர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. 1 முதல் 5 வாதிகளுக்கு அவருடைய தந்தை சம்பத்குமார் 1976 லேயே சொத்தை விற்பனை செய்தது தெரியும் என்பதால்தான் எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் தவறு. தாவா சொத்து மன்னார்குடி நகரத்தில் உள்ள சொத்து என்றால் சரி. அதனால் இந்த சொத்தை நாராயணசாமி கிரயம் பெற்ற விபரம் அனைவருக்கும் தெரியும் எனவும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:50:44 +0530

அதனடிப்படையில் 1ம் பிரதிவாதி ஆண்டு அனுபவித்து வருகிறார் எனவும் சொன்னால் தவறு. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி எந்த தேதி, மாதம், வருடத்தில் ஆக்கிரமித்தார் என்ற விபரத்தை வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் அவர் ஆக்கிரமிக்கவே இல்லை. மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் உள்ள நிறைவேற்று மனுவை நிறைவேற்றாத வகையில் உண்மைக்கு மாறாக வழக்கு தாக்கல் செய்து நிறைவேற்று மனுவை நடத்தவிடாமல் காலம் கடத்தி வருகிறேன் என்றால் தவறு. வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் சட்டத்திற்கு மாறானது என்றாலும் அந்த ஆவணங்களில் அடிப்படையில் சாட்சியம் அளிக்க இயலாது என்றாலும் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:50:50 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.